அ.வ.எண். **29/2022** பி.வா.சா.**2 –** பெருமாள் **20.06.2024**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பிரதிவாதியின் பூர்வீக ஊரும், எனது பூர்வீக ஊரும் பக்கத்து பக்கத்து ஊர். நான், 1ம் பிரதிவாதி, யோகானந்த் ஆகியோர் 1995ம் வருடம் முதல் டெக்ஸ்டைல்ஸ் தொழில் செய்து வருகிறோம். நான், 1ம் பிரதிவாதி, யோகானந்த் ஆகியோர் நெருங்கிய நண்பர்கள். எனக்கும், வாதியின் மகன் அருண் என்பவருக்கும் பழக்கம் கிடையாது. வாதியின் மகன் அருண் சுயகாசோலை மூலமாக ரூ.4 இலட்சம் என்னிடமிருந்து பெற்றுக்கொண்டார் என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. அந்த காசோலையில் வாதியின் மகன் கையெழுத்து செய்து, அவருடைய போன் நெம்பர் எழுதினார் என நான் சொல்வது முற்றிலும் தவறு என்றால் சரியல்ல. வாதியின் மகன் அருண் காசோலையில் கையெழுத்து செய்து, பணம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதியின் நெருங்கிய நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.